## கோலாலம்பூரில் 79 உணவகங்களுக்கு அபராதம்

# 3 கடைகள் மூடப்பட்டன

கோலாலம்பூர், பிப். 27-

தலைநகரைச் சுற்றியுள்ள உணவகங் களில் மேற்கொள் ளப்பட்ட கூட்டுச் சோதனை நடவடிக் கைகளில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று 79 உணவகங்களுக்கு அபராதம் விதித்தது.

தி கார்டன் மால், ஜாலான் ஜாலில் பெர்காசா, ஜாலான் மானிஸ் 3, தாமான் செகார், ஜாலான் லெபோ அம்பாங் ஆகிய பகுதிகளில் இச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கை யில் கூறியது.

இதேபோன்ற சோதனை நடவடிக்கை ஜாலான் தெங்காட் தொங் சின், தாமான் ஸ்ரீ சினார், 1 மவுன்ட் கியாரா ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டதாக அது கூறியது. இச்சோதனையின்போது 93 உணவகங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது 34 உணவகங்கள் திறக்கப் படாத நிலையில் எஞ்சிய 59 உணவகங் களில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டதாக அது கூறியது.



இச்சோதனையின்போது 2016ஆம் ஆண்டு உணவு லைசென்ஸ் சிறு சட்டம் 28(1) பிரிவின் கீழ் உணவகங்களைத் தற்காலிகமாக மூடுமாறு 3 உணவகங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.

எஞ்சிய 79 உணவகங் களுக்கு 2016ஆம் ஆண்டு உணவு லைசென்ஸ் சிறு சட்டம், 1979ஆம் ஆண்டு உணவு லைசென்ஸ் சிறு சட்டம், 1976ஆம் ஆண்டு ஊராட்சித்துறை சட்டத்தின் கீழ் இந்த அபராதங்கள் விதிக்கப் பட்டதாகவும் அது கூறியது.

தலைநகரைச் சுற்றியுள்ள அனைத்து உணவகங்களும் சுகாதாரத்தைக் கடைப்பிடிப் பதை உறுதிப்படுத்துவதற்கு அவ்வப்போது இதுபோன்ற சோதனை நடவடிக்கை தொடரப் படும் எனவும் அந்த அறிக்கை கூறியது.